காலங்களில் அங்கே கழிவுநீர் மட்டும் வருவதன் காரணத்தால் விவசாயத்திற்கு பாதிப்பு ஏற்பட்டு இருக்கிறது. மேலும் மக்களின் குடி நீருக்கும் பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது. இதன் காரணமாக அங்கே ஒரு பொது சுத்திகரிப்பு நிலையம் உடனடியாக அமைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன் வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புகளூரில் இருக்கிற காகித ஆலை, சர்க்கரை ஆலை ஆகிய இந்த இரண்டிலும் இருந்து வருகிற கழிவுநீர் அங்கே பாதிப்பை ஏற்படுத்துகிறது என்பது உண்மை. எனவே பொதுவான சுத்திகரிப்பு நிலையம் என்றல்ல. அந்தந்தத் தொழிற்சாலைகளிலே தனிப்பட்ட முறையிலே சுத்திகரிப்பு நிலையம் அமைக்க வேண்டும் என்று உத்தரவிடப்பட்டு அது அமைக்கப் பட்டிருக்கிறது. ஆனால் அதிலிருந்து வெளிவருகிற கழிவு நீர் நாம் குறிப்பிட்ட அளவுக்கு அதிகமாக அசுத்தமாக இருக்கிற காரணத்தால், மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் என்ன நிர்ணயம் வைத்திருக்கிறதோ, அந்த நிர்ணயத்திற்கு உள்ளே இல்லாமல் இருக்கிற காரணத்தால்தான் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன பிரச்சினை வருகிறது. எனவே அதை அந்த தரத்திற்குள்ளே கொண்டுவர வேண்டுமென்று உத்தரவிடப்பட்டிருக்கிறது. அப்படிச் செய்கிறபோது அந்தப் பிரச்சினைகள் தீர்க்கப்படும்.

அதோடு மட்டுமல்லாமல் கரூரில் இருக்கிற 334 சாயத் தொழிற்சாலைகளையும் ஒன்றாகச் சேர்த்து ஒரு பொது சுத்திகரிப்பு நிலையம் அமைக்க இப்போது ஏற்பாடுகள் செய்யவேண்டுமென்று அவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டு இருக்கிறது.

திருப்பூரைப் பொறுத்தவரையில் ஏற்கெனவே அதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு 3 பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு அந்த மூன்று பகுதிகளிலும் சுத்திகரிப்பு நிலையங்கள் தனித்தனியாக அமைக்கப்பட வேண்டும் என்று சொல்லி நடவடிக்கை எடுக்கப் பட்டு ஏறத்தாழ அந்த ஒரு அமைப்பு இப்போது துவங்கும் தருவாயில் இருக்கிறது. மற்ற இரண்டு அமைப்புகளும் விரைவாகத் துவங்கப்பட வேண்டும் என்பதற்காக மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் வேகமான நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறது.

(ஐ) சிதம்பரம் தொகுதியில் பொதுப்பணித் துறை வேலைகள் தாமதமாவதால் ஏற்பட்டுள்ள நிலை குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்த கவன ஈர்ப்பு. திருவாளர்கள் ச. அழகிரி மற்றும் எஸ். பீட்டர் அல்போன்ஸ் ஆகியோரில் ஒருவர் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. ச. அழகிரி.

1993 அக்டோபர் 29]

திரு. ச. அழகிரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''தென்னாற்காடு வள்ளலார் மாவட்டம், சிதம்பரம் தொகுதியில் பொதுப்பணித் துறை வேலைகள் நடைபெறாமல் தேங்கிக் கிடப்பது குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட விவர அறிக்கை ஒன்று பேரவைமுன் வைக்கப்பட்டுள்ளது :

அறிக்கை.

சிதம்பரம் கோட்டத்துக்கு பொதுப் பணித்துறை பணிகளுக்கு 1993-94 ஆம் ஆண்டிற்கு ரூ. 189.14 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. பொதுப் பணித் துறை வேலைகளில் 50 சதவீதம் முடிக்கப்பட்டு பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. சாக்காங்குடி அருகே வெள்ளாற்றில் கிராயின்கள் கட்டும் பணி மாதிரி ஆய்வுகள் (model studies) நடத்தப்பட்ட பிறகு செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும். இதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இது தவிர செப்டம்பர் 1993 முடிய கிடைக்கப்பெற்ற கடன் சான்று (எல்.ஓ.சி.) கொண்டு மற்ற பணிகள் சுமார் 50 சதவீதம் முடிக்கப்பட்டன. நிதி ஒதுக்கீடுகளுக்கு ஏற்ப எல்லாப் பணிகளும் முடிக்கப்படுகின்றன.

விவரங்கள் :

அமைப்பு/வேலையின் பெயர்.	1993-94-க்கு ஒதுக்கீடு.	இதுவரை செலவினம்.
(1)	(2)	(3)
	(ரூபாய் இலட்சங்களில்.)	
பொதுப்பணித் துறை/பாசனம் :		
1. சேத்தியாத்தோப்பு அணைக் கட்டு பாசன அமைப்பு.	7	3.5
2. கொள்ளிடம் கீழணை அணைக் கட்டு பாசன அமைப்பு.	47	23.5
3. ஏ.பி. மைனர் (பராமரிப்பு மற்றும் மராமத்து).	8	4

4. 3056. உள்நாட்டு நீர் போக்கு வரத்து கொள்ளிடம் (பராமரிப்பு மற்றும் மராமத்து).	19.92	4
5 அடிக்கமலை கிராயின்கள் ..	5.47	1.00
6. சுய தன்னிறைவு திட்டம் ..	59.75	24.51
7. சாக்காங்குடி கிராயின்கள்	31.00	மாதிரி ஆராய்வுகள் அறிக்கை கிடைத்ததும் மதிப்பீட்டுக்கு தொழில் நுட்ப ஒப்புதல் அளிக்கப்பட வேண்டும்.

பொதுப்பணித் துறை/கட்டிடம் :

1. பராமரிப்பும் மராமத்தும் ..	11.00	1.00
மொத்தம் ..	189.14	61.51

திரு. ச. அழகிரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் அளித்துள்ள விவர அறிக்கையில் 7 வேலைகள் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. அதிலே ஒரு வேலை மட்டும்தான் என்னுடைய தொகுதியிலே நடைபெறுகிற வேலை. மற்ற வேலைகள் எல்லாம் சிதம்பரம் கோட்டம் என்று பெயரிடப்பட்டு புவனகிரியிலும், கும்பகோணத்திலும், அணைக்கரையிலும் மற்றும் பிற இடங்களிலும் நடைபெறுகிற வேலையாகும். அந்த 7-வது வேலை கூட அதாவது சாத்தான் குடியில் நடைபெறுகிற வேலைகூட இன்னும் ஆரம்பிக்கப்படவில்லை என்பதை மாண்புமிகு அமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். மேலும் நெடுஞ்சாலைத் துறையை பொறுத்தவரையில் என்னுடைய தொகுதியிலே ஸ்ரீ ஆதிவராக நல்லூர் நெடுஞ்சாலைத் துறை பத்து லட்சம் ரூபாய்க்கு, அதற்கான வேலை வந்தது. ஆனால் அந்த வேலைக்கான செட்யூல்களை சென்று கேட்டபோது, அதிகாரிகள் தர மறுத்து விட்டார்கள். அதன் பிறகு நானே நேரடியாகச் சென்று அந்த வேலைக்கான ஒப்பந்தப் படிவங்களைக் கேட்டேன்.

பிற்பகல் 12-30

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கவன ஈர்ப்பிலே பொதுப்பணித் துறை வேலை என்றுதான் கேட்டிருக்கிறார். நெடுஞ்சாலைத் துறையை பற்றிச் சொல்லவில்லை. இருந்தாலும் நெடுஞ்சாலைத் துறையைப் பற்றிக் கேட்டாலும் கூட நெடுஞ்சாலைத் துறையிலே வேலைகள் நடைபெறவில்லை என்ற விவரத்தை இவர் கேட்கலாம். ஷெட்யூல் கொடுக்கவில்லை என்று சொன்னால் அதற்கு ஒரு தனியான கவன ஈர்ப்பை இது சம்பந்தமாக குறிப்பிட்டிருக்க வேண்டும். ஆகவேதான் ஏற்கனவே அது சம்பந்தமாக என்ன நடந்தது, எப்படி, அது கொடுத்தார்களா, இவர்கள் கேட்டார்களா ? அதனுடைய விவரம் என்ன என்று அதிகாரிகளிடத்திலே கேட்டு நான் பதில் வாங்க முடியும். ஆகவே இல்லாத பிரச்சினையை அவர் சொல்வதை எப்படி ஏற்றுக்கொள்ள முடியும் ? ஆகவே வேலைகள் சம்பந்தமாக இன்னின்ன பணிகள் இங்கே தடைபட்டுக் கொண்டிருக்கின்றன. அவைகளை எல்லாம் முடிக்க வேண்டும் என்று கேட்டால் அரசு நடவடிக்கை எடுக்கும். இது சம்பந்தமாக தனி கவன ஈர்ப்பு கொண்டுவந்தால், அதில் கேட்டால் அது சம்பந்தமான விவரங்களை இந்த அவையிலே நான் விளக்கமாகச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் கொடுத்ததிலே டைப் செய்யப்பட்டதில் பொதுப்பணித் துறை என்று இருக்கிறது. அதில் மேலாக எழுதி இருப்பதில், நெடுஞ்சாலைத் துறையையும் சேர்த்து எழுதியிருக்கிறது. ஆகவே துறையினர் பொதுப் பணித் துறை என்று அனுப்பியிருக்கிறார்கள்.

திரு. ச.அழகிரி : நான் உங்களிடம் கொடுக்கிறபோது நெடுஞ்சாலைத் துறை என்றுதான்.. ..

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இல்லை. அதிலே மேலே எழுதப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு சின்ன விளக்கம். நெடுஞ்சாலைத் துறை வேலைகளைப் பற்றி அவர் கேட்பதில் எனக்கு ஆட்சேபனையில்லை. இன்னின்ன வேலைகள் வந்திருக்கின்றன. இந்தப் பணிகள் இந்த அளவுக்கு நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. சில வேலைகள் இன்னும் நடைபெறவில்லை என்றால் அதிகாரிகளிடத்திலே நான் சொல்லலாம். இந்த வேலைகளை முடிக்கச் சொல்லுங்கள். இன்னும் புதிய வேலைகள் எடுங்கள் என்று கேட்பதில் எனக்கு ஆட்சேபனையில்லை. ஆனால் இந்த ஷெட்யூல் கொடுக்கின்ற விவரங்கள் தமிழ்நாடு முழுக்கவும் டெண்டர் வேலை நடைபெறுகிறது. எந்த ஊரிலே கொடுக்கவில்லை. எந்த ஊரிலே அதிகாரிகள் கொடுக்கவில்லை என்ற பிரச்சினை வருகிறபோது, அது சம்பந்தமாக விவரமாக முன்னாலே தெரி

வித்து இருந்தால், அந்த கோட்ட பொறியாளரிடமோ, சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடத்திலோ விவரங்களைக் கேட்டு அவருக்குச் சரியான தகவலை அளிக்கமுடியும். இப்படி கேட்கிறபோது நான் மேலெழுந்தவாரியாகத்தான் சொல்ல முடியுமே தவிர, முழு விவரத்தை அளிக்க முடியாது என்பதற்காகத்தான் சொல்கிறேன். அவருக்கு முழு விவரம் தெரியவேண்டும் என்பதுதான் நோக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதனாலே கேள்வியாகக் கேளுங்கள்.

திரு. ச. அழகிரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய குறிப்பிலே நான் நெடுஞ்சாலைத் துறையைச் சேர்த்துதான் கொடுத்திருக்கிறேன். அது ஏதோ தவறுதல் காரணமாக பொதுப்பணித் துறை மட்டுமே கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்த அறிவிக்கப்பட்ட வேலை, அந்த வேலையைச் செய்யவேண்டும் என்பதற்காக மாவட்டத்திலே சென்று ஷெட்யூல் கேட்டபோது அவர்கள் தர மறுக்கிறார்கள். நானும் சொன்னேன். அமைச்சர் அவர்கள் எனக்கும் வேண்டியவர்தான் என்று நான் சொன்னேன். அவர்கள் சொல்கிறார்கள், அதை அவர் அல்லவா சொல்ல வேண்டும். நீங்கள் சொன்னால் எப்படி என்று கேட்கிறார்கள்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்கள் அத்தனை பேருக்கும் அமைச்சர் வேண்டியவர்தான். தமிழ்நாட்டிலே இருக்கின்ற மக்கள் அத்தனை பேருக்கும் அமைச்சர் பொதுவானவர்தான்.

திரு. ச. அழகிரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலைக்கான ஷெட்யூலைக்கூட பெறமுடியவில்லை என்று சொன்னால், அந்த நிர்வாகத்திலே எவ்வளவு கோளாறுகள் இருக்கின்றன என்பதற்காக நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதைக் குற்றச்சாட்டாகச் சொல்லக்கூடாது.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த 'கோளாறு' என்ற வார்த்தையை நான் ஆட்சேபிக்கிறேன். ஷெட்யூல் கொடுக்கவில்லை என்று வேண்டுமானாலும் அவர் கேட்கலாம். அதற்கான விளக்கத்தை நான் சொல்லலாம்.

1993 அக்டோபர் 29]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர் வாபஸ் வாங்கிக் கொள்கிறார். அதைத் திரும்பப் பெற்றுக்கொள்கிறார்.

திரு. ச. அழகிரி : நான் அதைத் திரும்பப் பெற்றுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தாமதத்திற்கு மட்டும் காரணம் கேளுங்கள்.

திரு. ச. அழகிரி : ஷெட்யூல் கொடுத்தால்தான் அந்த வேலையைச் செய்ய முடியும். அதிகாரியை ஒரு சட்டமன்ற உறுப்பினரே கேட்டாலும்கூட அதைக் கொடுப்பதற்கு மறுக்கிறார்கள். சென்ற பொதுப்பணித் துறை மானியத்தின்போது அமைச்சர் அவர்கள் தெளிவாகக் குறிப்பிட்டார்கள். இதைப் போன்ற தவறுகள் இனிமேல் நடக்காது என்று சொன்னார்கள். நான் அதையே குறிப்பிட்டு .... (குறுக்கீடு)

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : இனிமேல் நடக்காது என்று சொன்னால் ஏற்கெனவே நடந்ததாக அர்த்தம். (குறுக்கீடு) இனிமேல் அல்ல. இது மாதிரி புகார்கள் வந்தால் அரசு நடவடிக்கை எடுக்கும் என்று சொன்னேன். அது தகுந்த அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்படும் என்று சொல்லியிருக்கிறேன். இனிமேல் நடக்காது என்று சொல்லவில்லை. அப்படி என்றால், நான் ஏற்கனவே நடந்ததை ஒத்துக்கொண்டதுபோல் அர்த்தம். இனிமேல் என்பதை நான் ஒத்துக்கொள்ளவில்லை. நான் அதை ஆட்சேபிக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் கேள்வியாகக் கேளுங்கள். தாமதம் பற்றிக் கேளுங்கள்.

திரு. ச. அழகிரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இப்போது கண்கூடாகவே சொல்கிறேன். நானே போய் கேட்டேன். அவர்கள் தர மறுக்கிறார்கள். இதைவிட உங்களுக்கு என்ன அத்தாட்சி வேண்டும்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுதான் நான் சொல்லியிருக்கிறேன். அது சம்பந்தமாக விசாரிக்கிறேன். நீங்கள் அதை என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறீர்கள். நான் என்ன விவரம் என்று கேட்கிறேன். அதற்குத் தனியாக ஒரு கவன ஈர்ப்பு கொண்டு வாருங்கள் அல்லது ஒரு கேள்வியாகக் கேளுங்கள். அதை என்னிடத்திலே தனிப்பட்ட முறையிலே வந்துகூட நீங்கள் சொல்லியிருக்கலாம். இந்த சட்டமன்றத்திலே கேட்க வேண்டும் என்று கூட அவசியம் கிடையாது. பல்

வேறு பிரச்சினைகளை இன்றைக்குத் தனிப்பட்ட முறையிலே வந்து சட்டமன்ற உறுப்பினர்கள் சொல்கிறார்கள். எல்லாவற்றுக்குமே சட்டமன்றத்தில் கவன ஈர்ப்புப் போட்டுக்கொண்டிருந்தால், ஒரு நாளைக்கு 250 கவன ஈர்ப்பு போட வேண்டும். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. அழகிரி, நீங்கள் கேள்வியாகக் கேளுங்கள், நேரம் ஆகிறது.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்று எல்லோரும் சொல்லியிருக்கிறார்கள். அவர்களுக்கு பதில் சொல்லியிருக்கிறோம். நடவடிக்கை எடுத்து இருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் ஒரு குறிப்பிட்ட ஒன்றை மட்டும் சொன்னால் பதில் சொல்ல முடியாது.

திரு. ச. அழகிரி : இந்த அரசாங்கத்தினுடைய செலவிலிருந்து செய்யப்படுகின்ற ஒரு வேலை எங்களுக்கு மறுக்கப்படுகிறபோது, நான் அந்த வேலையைக் கூட கேட்கவில்லை. அதற்கான ஷெட்யூல் கேட்கிறபோது அவர்கள் மறுக்கிறார்கள் என்றால், நிர்வாகம் நடக்கிறதா என்றுதான் நான் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிர்வாகம் நன்றாகத்தான் நடக்கிறது. நீங்கள் சொல்வதற்காக நிர்வாகம் ஒன்றும் நடக்காமல் இருக்காது. நிர்வாகம் நன்றாகவே நடக்கிறது. வேலை நடக்சிறது, ரோடு போடுகிறார்கள். கட்டடம் கட்டுகிறார்கள். நீங்கள் சொல்வதற்காக இல்லை. நிர்வாகமே நடக்கவில்லை என்று சொல்வதை நான் ஆட்சேபிக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கவன ஈர்ப்புத் தீர்மானத்தில் பேசும்போது குற்றச்சாட்டு எல்லாம் கூடாது என்று விதி இருக்கிறது. நீங்கள் மேற்கொண்டு ஒரு கேள்வி கேட்கலாம் என்றுதான் அனுமதித்தேன். நீங்கள் குற்றச்சாட்டு எல்லாம் இதிலே சொல்லக்கூடாது என்று விதி இருக்கிறது. (குறுக்கீடு) நீங்கள் விதியை மீறிப் பேசி, நேரத்தை எடுத்துக் கொண்டிருக்கிறீர்கள்.

1993 அக்டோபர் 29]

பிற்பகல் 12.35

திரு. ச. அழகிரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனவே, ஸ்ரீ ஆதிவராகநல்லூர் வேலைக்கு செட்யூல் வழங்குவதற்கு இந்தப் பேரவையின் மூலமாக பேரவைத் தலைவர் அவர்கள் உத்தரவாதம் அளிப்பார்களா எனக் கேட்டுக் கொள்கிறேன். உதாரணமாக, 20 வேலைகள் நடைபெறாமல் இருக்கின்றன.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுப்பணித் துறை வேலைகளைப் பொறுத்தமட்டிலே அலாட்மென்ட் கொடுக்கும்போது மொத்தமாக ஒரு வேலையைச் செய்ய முடியாது. ஒரு வருடத்திற்கு இவ்வளவு என்றுதான் சொல்கிறார்கள். 3 மாதத்திற்கு ஒரு தடவை என்.ஓ. சி. கொடுக்கிறார்கள். இந்த ஆண்டிற்கு சிதம்பரம் கோட்டத்திற்கு 2 கோடி ரூபாய் என்று வைத்துக் கொண்டால், முதல் 3 மாதத்தில் 50 இலட்சம் ரூபாய்க்கான வேலைகளை எடுப்போம். அடுத்த 3 மாதத்தில் 50 இலட்சம் ரூபாய்க்கான வேலைகள். அப்பொழுதுதான் அரசாங்கத்திலே பணம் வரும். பூரா வேலையையும் செய்ய முடியாது. இப்பொழுது நிதியாண்டின் அரை ஆண்டிலே இருக்கிறோம். இன்னும் டிசம்பர் மாதம் கூட வரவில்லை மார்ச் மாதத்திற்குள்ளே முடிக்க வேண்டும் ஆகவே, பாதி அளவு நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. 50 சதவிகித வேலைகள் முடிக்கப்பட்டிருக்கிறது. அவர் சொன்னார் குற்றச்சாட்டுகளை. வெள்ளத் தடுப்பு அபாயத்திற்கு 1 கோடி ரூபாய் அந்தப் பகுதியிலே ஒதுக்கப்பட்டிருக்கிறது, நம்முடைய புரட்சித் தலைவியின் ஆட்சியிலே. இதிலே பாகுபாடு கிடையாது. அவருடைய வேண்டுகோளை ஏற்றுத்தான் இன்றைக்கு முதலமைச்சர் அவர்கள் அந்தப் பகுதியிலே வெள்ளத் தடுப்பு அபாயத்திற்காக ஒரு கோடியே 10 இலட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். ஆகவே, சிதம்பரம் தொகுதியைப் புறக்கணிப்பதாக ஆகாது. எங்கே வேலை நடக்க வேண்டுமென்று அதிகாரிகள் அந்த இடத்திலே ஸ்பாட் இன்ஸ்பெக்சனில் பார்க்கிறார்களோ, அங்கே எடுக்கிறார்கள். சில இடங்களிலே, விடுபட்ட இடங்களிலே சட்டமன்ற உறுப்பினர்கள் எங்களிடத்திலே தெரிவிக்கிறார்கள். நாங்கள் அவர்களுக்கு அறிவுறுத்தி அந்த வேலையையும் எடுக்கச் சொல்கிறோம். அந்த அடிப்படையிலே அவர்களுடைய பகுதியிலே வேலையை எடுக்க வேண்டுமென்று சொன்னால், அதை நான் செய்யத் தயாராக இருக்கிறேன். இந்த செட்யூல் சம்பந்தமான குற்றச்சாட்டுகளை நான் மறுக்கிறேன். அது, இது சம்பந்தப்பட்ட பிரச்சினை அல்ல. ரெஜிஸ்டர்ட் காண்ட்ராக்டர்கள் போய் கேட்கின்றபோது செட்யூல் கொடுக்கிறார்கள். சில பேர் காண்ட்ராக்ட் ரெஜிஸ்ட்ரேசன் இல்லாமல் போய் கேட்டிருப்பார்கள். ஆகவே, அதில் கொடுப்

பதற்கு நியாயம் இல்லை. அந்தப் பிரச்சினையை என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வந்தால் நான் நடவடிக்கை எடுக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(ஒ) ராமாநதி அணைக்கட்டின் மண் மேடிட்ட மதகுகளைச் செப்பனிட வேண்டிய அவசியம் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்த கவன ஈர்ப்பு. (குறுக்கீடு) திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்.

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆண்டு எங்கள் பகுதியிலே ஏற்பட்ட பெரு வெள்ளத்தின் காரணமாக......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதிலே இருப்பதை அப்படியே படியுங்கள்.

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் : கடந்த ஆண்டு எங்கள் பகுதியிலே பெய்த பெரு மழையின் காரணமாக ஏற்பட்ட வெள் ளத்தினால்......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதிலே தென்காசித் தொகுதியில் என்று இருக்கிறதா ?

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் : அதுதான் இருக்கிறது. அதைத்தான் நான் சொல்கிறேன். கொண்டு வந்த கவன ஈர்ப்பு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கொடுத்திருக்கிறதைப் படியுங்கள்.

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் : நான் தென்காசி என்று கொடுக்கவில்லை எங்கள் பகுதி என்று தான் கொடுத்தேன். ஆபீசில் வந்து—அதை எல்லாம் நான் படிக்கவில்லை. தலைவர் அவர்களே, ஒரு சின்ன கரக்சன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அலுவலகத்தில் சிறிது திருத்தியிருப்பார்கள்.

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் : அலுவலகத்தில், நான் சொல்லாதது இருந்தால் எப்படிப் படிப்பது என்று கேட்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அப்படியானால் விட்டு விட வேண்டியதுதானே, நான் கேட்கவில்லை என்று நீங்கள் சொல்லலாம்.

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் : இல்லை. இல்லை நான் எழுதாத வார்த்தை அதில் இருந்தால்—நான் என் தொகுதி என்று சொல்லவில்லை, எங்கள் பகுதி என்றுதான் சொல்லியிருக்கிறேன். இதிலே தென்காசி தொகுதியிலுள்ள ராமாநதி அணை என்று இருக்கிறது. அணை அம்பாசமுத்திரம் தொகுதியிலே இருக்கிறது. அதன் பாசன பகுதி கொஞ்சம் எங்கள் பகுதியிலே இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் 'எங்கள் பகுதியில்' என்று கொடுத்திருக்கிறீர்கள் அல்லவா ?

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் : ஆம், எங்கள் பகுதியில் என்றுதான் கொடுத்திருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதை, துறையில் உங்களுடைய தொகுதி என்பதற்காக எடுத்திருக்கலாம்.

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் : எங்கள் பகுதியிலுள்ள ''ராமாநதி அணைக்கட்டிலுள்ள மதகினை சரி செய்ய வேண்டியது குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு நான் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று பேரவைமுன் வைக்கப் பட்டுள்ளது.

அறிக்கை.

1992 நவம்பர் மாத புயல் மழையில் ராமாநதி நீர்த் தேக்கத்தில் உள்ள அவசர கால அடைப்பான் சிக்கி இருந்தாலும், சர்வீஸ் கேட் நல்ல முறையில் இயங்கி வருகிறது. அடைப்பானில் வேண்டிய ஒட்டைகள் செய்து பாசனத்திற்கு அவசர கால போதுமான தண்ணீர் கொடுத்துவரப்படுகிறது. இதனால் பாசனத்திற்கு எந்த தடையும் இல்லை. அவசர கால அடைப்பானையும் பழுதுபார்க்க விரைவான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களால் கொடுக்கப்பட்டிருக்கின்ற தகவல்கள் சரியான தகவல்கள் அல்ல என்று

நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த மதகுகள் கடந்த பெருவெள்ளத்தின் காரணமாக ஏற்பட்ட மணல் மேடு சரிவின் காரணமாக அதனுடைய சட்டங்களிலே சிக்கி, மிகுந்த அளவிலே பொருட் செலவிலே அந்த மணல்மேடு அகற்றப்பட்டாலும் கூட, அந்த மதகுகளைத் தூக்க முடிய வில்லை. எனவே, 1992 நவம்பருக்குப் பிறகு இந்த ராமாநதி அணைக்கட்டுக்கான பாசனத்திலே விவசாயிகளுக்கான விவசாய வேலை நடக்கவில்லை. அது, அந்தத் தொகுதியினுடைய சட்ட மன்ற உறுப்பினர் மாண்புமிகு உறுப்பினர் திரு. முருகையா பாண்டியன் அவர்களுக்கும் தெரியும். எனவே, விவசாயிகள் 3 பருவங்களாக விவசாயம் செய்ய முடியாமல் அந்த பருவ நிலங்கள் எல்லாம் தரிசாகக் கிடக்கின்றன. இதிலே என்ன சொல்லியிருக் கிறார்கள் என்று சொன்னால்—மதகுகளில் ஓட்டைப் போடப் பட்டு, அதன் மூலம் தண்ணீர் கொடுக்கப்படுகிறது என்று அதிகாரிகள் தகவல்களை அமைச்சருக்கு தந்திருக்கிறார்கள். நான் சின்ன ஒரு நடைமுறை சாத்தியத்தை சொல்கிறேன். முன்னால் என்ன நடக்கும் என்று சொன்னால் கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் கொடுத்தால், சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அமைச்ச ரோடு தொடர்பு கொள்கிறபோது அதில் சம்பந்தப்பட்ட சட்ட மன்ற உறுப்பினரிடம் பேசுங்கள் என்று சொல்லுவார்கள், எங்க ளிடம் அப்படிப் பேசச் சொல்லியிருந்தால் நான் அது தவறு என்று சொல்லிக் காண்பித்திருப்பேன். எனவே, எனக்கு என்ன வருத்தம் என்று சொன்னால், அந்த மதகு உடனே திறக் கப்பட வேண்டும். அதிலும் அமைச்சர் அவர்கள் ஒரு குறிப் பிட்ட காலக் கெடுவாவது—வெள்ளம் முடிந்து ஓராண்டாகி விட்டது—ஓராண்டுக் காலமாக மதகுகள் திறக்கப்படாமல் இருக்கிறது. இனிமேல் விரைவில் சரி செய்யப்பட வேண்டு மென்ற உறுதியைத்தான் அமைச்சர் அவர்கள் தந்திருக்கிறார் களேயொழிய அது எப்படி முடியும் என்று திட்டப் பணிகளை வரையறுத்துச் சொல்லக் கூட அமைச்சர் அவர்களால் இயல வில்லை என்று சொன்னால், நான் உண்மையிலேயே வருத்தப் படுகிறேன்.

பிற்பகல் 12-40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வி கேளுங்கள்.

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்: 3000, 4000 விவசாயக் குடும்பங்கள் பாதிக்கப்படுகின்ற சூழ்நிலை இருக்கின்றபோது இந்த பிசான பருவத்திற்காவது—மழைக்காலம் ஆரம்பித்து விட்டது, அணை நிறைய தண்ணீர் இருக்கிறது—இந்த ஆண்டா வது விவசாயம் துவங்குவதற்கு அந்த மதகுகளைத் திறக்க மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.